சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. OS. 174/2020

2023ம் ஆண்டு மார்ச் மாதம் 07ம் நாள் செவ்வாய்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.சித்ரா பென்ஞ் கிளார்க் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தினேஷ் | தொழில் | |
| தந்தை/கணவர் பெயர் | செல்வம் | ஜாதி | |
| கிராமம் | சித்தேரி | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**07.03.2023** முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 03.06.1996 தேதியிட்ட உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1,** 19.08.2005 தேதியிட்ட கிரய பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.2,** 20.06.2017 தேதியிட்ட செட்டில்மென்ட் பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.3**, 15.07.2020 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.4**, அஞ்சலக ஒப்புகை அட்டைகள் 4 அவைகள் **வா.சா.ஆ.5**, **6,7,8,** அஞ்சலக ரசீதுகள் **வா.சா.ஆ.9**, 19.09.2020 தேதியிட்ட பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.10**, 30.09.2020 தேதியிட்ட மறு அறிவிப்பு **வா.சா.ஆ.11,** அஞ்சலக ஒப்புகை அட்டைகள் 3 அவை **வா.சா.ஆ.12, 13, 14,** அஞ்சலக ரசீதுகள் **வா.சா.ஆ.15,** தாக்கல் செய்கிறேன். வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.